29th March 1965]

Pension scheme for administrative staff in aided Colleges

* 355 Q.—SRI A. ARUMUGAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether representations have been received from the President, University Teachers' Association, Madras, for the inclusion of administrative staff of aided colleges to the Pension Scheme; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) The matter is under examination.

Protest by self-immolation

* 356 Q.—SRI S. J. RAMASWAMI :
SRI M. KALYANASUNDARAM :
SRI A. KUNJAN NADAR :
SRI S. MADHAVAN :
} Will the Hon. the Chief Minister be pleased to state whether there were any cases of self-immolation by individuals as a protest against the imposition of Hindi as official language with effect from 26th January 1965?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There were seven cases of self-immolation by individuals during the recent Anti-Hindi agitation. Enquiries reveal that domestic troubles, illness, etc., also motivated them to take this extreme step.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இம்மாதிரிச் சம்பவம் எந்தச் சமயத்திலுமே, எப்போதுமே நடைபெற்றது கிடையாது. சர்க்காரின் தவறான கொள்கையினால் ஏற்படுகிறது என்று எல்லோரும் சொல்கிறார்கள். இந்த விஷயத்தில் இம்மாதிரி நடைபெற்றதற்குக் காரணம் என்ன என்பதை ஆராய்ந்து இனிமேலாவது இப்படி நடக்காமல் செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இப்போது அளித்த விடையை விட வேறு ஒன்றும் சொல்வதற்கு இல்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : ஒரு புனிதமான லட்சியத்திற்காகத் தன் உயிரையே பலியிட்டவர்களின் மீது, பழி கலந்த சேற்றை வாரி இறைத்தது கனம் முதலமைச்சர் பரப்புகிற தமிழர் பண்பாட்டிற்கு உகந்ததா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவரவர்கள் பண்பாடு அவரவர்களோடு இருக்கட்டும்.

திரு. எம். எஸ். மணி : இந்தத் தீக்குளித்தவர்களின் குடும்பத்திற்கு நம்முடைய அமைச்சர்கள் யாராவது சென்று ஆறுதல் சொன்னார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றி எனக்குத் தகவல் இல்லை.

[29th March 1965

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : இந்தத் தீக்குளித்த 7 பேர்கள் அவரவர்கள் எழுதி வைத்து விட்டுப்போன இந்தி எதிர்ப்பு கோஷங்களையும், கடிதங்களையும் அரசாங்கம் பரிசீலித்ததா? அப்படிப் பரிசீலித்து இருந்தால் அதையும் தவிர்ப்பதற்கான காரணங்களை அமைச்சர் வெளியிடுவார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கத்திற்குச் சில தகவல்கள் கிடைத்து இருக்கின்றன. அதற்கு மேல் ஒன்றும் சொல்வதற்கில்லை.

மாணக்கருடன் போலீசார் கைகலப்பு

*** 357 கேள்வி.—திரு. எஸ். மாதவன் :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் 26-ம் தேதி மதுரை நகரில் தியாகாராசர் பொறியியல் கல்லூரி மாணவர்கள் மீது போலீசார் தாக்குதல் நடத்தியதற்குரிய காரணங்கள் யாவை?

(இ) அதன் விளைவால் ஏற்பட்ட சேதங்கள் யாவை?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) In defiance of the Prohibitory Order under section 30 of the Police Act then in force, about four hundred students of the Thiagaraja College of Engineering, Madurai assembled on the road outside their college. When the police advised them to disperse in view of the prohibitory order they became violent and indulged in stone throwing. They could be dispersed only after the use of teargas and a mild lathi charge.

(b) Some police personnel sustained injuries.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்தத் தடியடிப் பிரயோகம் நடந்த திருப்பரங்குன்றம் நெடுஞ்சாலையிலிருந்து 2½ பர்லாங்கிலுள்ள கல்லூரி விடுதிக் கட்டடத்திற்குள்ளே கண்ணீர்ப் பிரயோகம் நடைபெற்றது என்பது அமைச்சருக்குத் தெரியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது கொடுத்த தகவலை விட என்னிடம் வேறு தகவல் இல்லை. ஆனால் இது விஷயமாக 'பிரைவேட் கம்ப்ளேன்ட்' கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆகையினால் இது 'ஸப்ஜுடிஸ்'.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத்தலைவர் அவர்களே, கல்லூரி முதல்வர் அனுமதி பெறாமலே, போலீசாரே உள்ளே நுழைந்து தாக்கல் நடத்தினதாகச் சொல்லப்படுகிறதே, அதைப் பற்றிக் கல்லூரி முதல்வர் அரசாங்கத்திடம் தகவல் தெரிவித்திருக்கிறாரா? அதன் மீது அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கல்லூரி முதல்வர் என்ன தகவல் கொடுத்து இருக்கிறார் என்பதைப்பற்றித் தனிக் கேள்வி வேண்டும். அமைதியை நிலைநாட்டும் வகையிலே சில சமயங்களில் கல்லூரியிலே போலீசார் செல்ல வேண்டியிருக்கிறது.